**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 85/2019 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.2 |
| Name : | ஜோதி |
| Father's Name/Husband Name: | பாஸ்கர் |
| Village : | தேனூர் |
| Taluk : | குன்னம் |
| Age : | 50/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 12.05.2026

**(1969-ம் ஆண்டின் 54வது விதியில் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 முதல் 4 வரை ஆஜர் )**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து கொண்டிருந்தேன். தற்போது கையில் அடிப்பட்டதில் இருந்து வேலைக்கு செல்வதில்லை. அ.சா.1 எனது கணவர். என்னுடைய மாமனாருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் அன்பழகன் மற்றும் பெரியசாமி ஆகியோருக்கு தலா 8 சென்ட் வீதம் கிராயம் செய்து கொடுத்துவிட்டார். மொத்தம் 64 சென்ட் நிலம் என் மாமனாருக்கு இருந்தது. அதில் 16 சென்ட்டை தான் மேற்கண்ட நபர்களுக்கு விற்றுவிட்டார். மீதமுள்ள 2 சென்ட் நிலத்தில் புளியமரம் இருந்தது. எங்களுக்கு பாத்தியப்பட்ட 2 சென்ட் நிலத்தை அன்பழகன் ஆக்கிரமிப்பு செய்ததால் எங்களுக்குள் முன்விரோதம் இருந்து வருகிறது. வரைப்படத்திலும் மாற்றி விட்டார்.

சம்பவத்தன்று இரவு 7 மணியளவில் நான் வீட்டிற்குள்ளே படுத்துக் கொண்டிருந்தேன். அப்போது எதிரிகள் முத்துவேல் மற்றும் செந்தில் இருவரும்

எங்கள் வீட்டிற்கு வந்து கதவை தட்டினார்கள். நான் சத்தம் கேட்டு வெளியே வந்தேன். எதற்காக கோட்டிற்கு சென்றாய் என்று சொல்லி எதிரி முத்துவேல் என்னுடைய முடியை பிடித்து இழுத்து வந்தார், எதிரி பெரியசாமி கட்டையால் என்னுடைய வலது கையில் அடித்தார். அதன்பிறகு எதிரிகள் அனைவரும் என்னை அடித்தார்கள். எதிரிகள் டாட்டா சுமோ மூலம் எங்களை ஏற்றிக் கொண்டு காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார்கள். போலிசார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் நானும் எனது கணவரும் சிகிச்சையில் சேர்ந்தோம். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சிசிக்சைக்கு சேர்ந்த மருத்துவரிடம் 15 நபர்கள் தாக்கியுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சொல்லவில்லை. இரவு 10.30 மணிக்கு தான் சம்பவம் நடந்ததாக மருத்துவரிடம் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ரெக்கார்டில் 7 மணி என்று பதிவு செய்து இருப்பதால் 7 மணி என்று சொல்கிறேன். எனது கணவர் இடது கையில் அடிப்பட்டதாக கூறியுள்ளார் அதற்கு மாறாக எனது வலது கையில் தான் அடிப்பட்டதாக கூறுகிறேன் என்றால் எனக்கு வலது கையில் தான் அடிப்பட்டு இருக்கிறது. மேற்கண்ட இடம் சம்மந்தமாக நீதிமன்றத்தில் உரிமையியல் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நீதிமன்றத்தின் மூலம் வந்து நிலத்தை அளந்தார்கள் என்றால் வந்தார்கள் ஆனால் அளக்க விடவில்லை.

நீதிமன்றத்தின் மூலம் அளந்து தான் ஆணையர் அறிக்கையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு செய்து அந்த உத்தரவின்படி நிலத்தை அளந்து அறிக்கை தாக்கல் செய்தார்கள் என்றால் சரியல்ல. அந்த அறிக்கையின்படிதான் Contempt of Court என்று வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகள் ஆக்கிரமிப்பு செய்தததாக சொல்லப்படும் 2 சென்ட் நிலத்திற்கான ஆவணம் ஏதேனும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் குன்னம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எதிரிகள் வரைப்படத்தை திருத்திக் கொண்டார்கள், அவ்வாறு எதிரிகள் திருத்திக் கொண்டதற்கான ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

எதிரிகள் அவர்கள் கிரயம் பெற்ற நிலத்தில் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றாலும், நான் தான் எதிரிகளிடம் வீண் சண்டை போடுகிறேன் என்றால் சரியல்ல. அவர்கள் எனது 2 சென்ட் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். வயதான சின்னப்பிள்ளை என்பவரை தாக்கியதற்காக என் கணவரின் மீது குற்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான், ஆனால் என் கணவர் அவரை கண்ணால் கூட பார்க்கவில்லை. இடப்பிரச்சனையால் தான் நாங்கள் சின்னப்பிள்ளையை அடித்துவிட்டு அந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக எதிரகளுக்கு எதிராக பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காயம் பட்ட பிறகு 108 ஆம்புலன்ஸ் மூலம் நான் அரியலூர் அரசு மருத்துவமனைக்கு சென்றதற்கான ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அரியலூர் அரசு மருத்துவமனைக்கு சென்றபின் என்னை அவர்கள் பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டார்கள். அரியலூர் அரசு மருத்துவமனையில் எனக்கு சிகிச்சை அளிக்கவில்லை, எத்தனை மணிக்கு அரியலூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் இரவு 10.30 மணி இருக்கும். அரியலூர் அரசு மருத்துவமனையில் இருந்து சிசிக்சை அளிக்க முடியாது என்று பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்த பிறகு எத்தனை மணிக்கு நான் சிசிக்சைக்காக பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தேன் என்றால் மறுநாள் காலை தான் பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன்.

நான் சொல்வது போல் உண்மையாகவே சம்பவம் நடந்திருந்தால் சம்பவத்தன்றே மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்திருப்பேன் என்றாலும், சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்பதால் தான் மறுநான் காலை பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்துள்ளேன் என்றாலும் சரியல்ல. போட்டி வழக்கிற்காக காயத்தை நானே ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.